1972 மார்ச் 30]

திரு. தி. பொன்னுமலை : கைக்குத்தல் அரிசி என்று சொல்லி சில கூட்டுறவுத் துறை கடைகளில் மெஷினில் அறைத்த அரிசியை வாங்கி பல ஜெயில்களுக்கும் விநியோகம் செய்கிறார்கள். அதுபற்றி என்னுடைய தொகுதியிலே கூட அமைச்சரிடத்தில் ஒரு புகார் எழுதிக் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி இன்னும் நடவடிக்கை இல்லை. இதைப் போல பல இடங்களில் நடைபெறுவது பற்றி அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ? அப்படியிருந்தால் எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இம்மாதிரியான புகார் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், வேறு பலரும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார்களெல்லாம் அவ்வப்போது ஆராயப்பட்டு, அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

திரு. எம். முத்தையா : கைக்குத்தல் அரிசி மிகவும் சத்துள்ளது என்ற காரணத்தினால் கைக்குத்தல் அரிசியை அமைச்சர் அவர்கள் தினம் ஒரு தடவையாவது சாப்பிடுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே அவர்களுக்கு ஒருவேளை தெரிந்திருக்காது. நான் அரிசியே சாப்பிட்டு வதில்லை (சிரிப்பு).

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1972-வது ஆண்டிலே இன்னும் கையினாலே அரிசியைக் குத்தி சாப்பிடுவது என்பது நகைப்புக்குரிய ஒன்றாகும். காலப்போக்கில், காலம் போகிற போக்கில் பழைய நிலையிலேயே நிற்காமல், அரிசியின் சத்துப் போகாமல் அரிசி அறைக்கின்ற மெஷினில் இரும்பு ராடுக்குப் பதிலாக, ரப்பர் போட்டு அறைத்தால் சத்து குறையாது. குவாலிடி ஹல்லர் என்று கையினாலே சுற்றக்கூடிய சிறிய மோட்டார் வைத்து சுற்றக்கூடிய ஒரு மெஷின் வந்திருக்கிறது. கைக்குத்தல் அரிசி சத்து பூராவும் அதில் அறைத்த அரிசியில் இருக்கிறது. ஆகவே, அதுபற்றி விளம்பரப் படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : கைக்குத்தலுக்குக்கூட ஓரளவுக்கு இயந்திரத்தை புகுத்தலாம் என்று எண்ணி, அதற்கு ஒரு சிறிய இயந்திரத்தைப் பரீட்சார்த்தமாகச் செய்து பார்த்தோம். அதைத் திருமிழிசை என்ற ஊரில் நடைமுறையில் ஓட்டிவருவது என்று முடிவு செய்திருக்கிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is the Hon. Minister aware that it is not only useful in meeting the health requirements, it also solves unemployment problem, because many ladies use it as their main occupation ? Will the Hon. Minister consider giving small mills for individual cottage families, so that they can use it, produce rice without destroying the protein contents, small mills electrically operated and equipped with machinery for preserving vitamins ?

[1972 மார்ச் 30

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, the small technological improvement that has been devised has been introduced. It is electrically operated; there is a small size sheller with some rubber part. The unemployment problem is also very much in the mind of the Government. I may assure the Hon. Member that even though in several of the village industries technological improvements have been introduced, care has also been taken that no person is thrown out of employment.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, கைக்குத்தல் அரிசி சத்துள்ள உணவு என்று பிரச்சாரம் செய்யவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதே நேரத்தில் மில்லில் தீட்டப்படும் அரிசி சத்துள்ள உணவு இல்லை என்று அமைச்சரவர்கள் பிரச்சாரம் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, சத்துள்ள அரிசியாக கைக்குத்தல் அரிசி இருக்கும் என்று இந்தத் துறையிலே—கதர் கிராமத் தொழில் துறையிலே—பிரச்சாரம் செய்யவில்லை என்று சொன்னேன். அதைப்பற்றி பிரச்சாரம் செய்வதென்றால் அதற்கு வேறு துறை இருக்கிறது; அதன் மூலம் செய்யலாம்.

திரு. எஸ். நல்லசாமி: தலைவரவர்களே, கைக்குத்தல் அரிசி எத்தனை கல்லூரி ஆஸ்டல்களில் வாங்கப்படுகிறது? மற்ற கல்லூரி ஆஸ்டல்களிலும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா? ராமகிருஷ்ண கல்லூரி ஆஸ்டலில் கைக்குத்தல் அரிசியில் உணவு தயாரிப்பதால், அங்குள்ள மாணவர்கள் கொழு கொழு என்று இருக்கிறார்கள். எனவே, எல்லா ஆஸ்டல்களிலும் கைக்குத்தல் அரிசி வாங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஆஸ்டலில் கைக்குத்தல் அரிசியில் உணவு தயாரிப்பதால், அங்குள்ள மாணவர்கள் கொழு கொழு என்று இருக்கலாம். ஆஸ்டல்களில் கைக் குத்தல் அரிசி வாங்குகிறார்கள். ஆனால் எத்தனை ஆஸ்டல்களில் என்பதற்கு விபரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விசாரித்து தெரிவிக்கலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, கைக் குத்தல் அரிசிக்கு ஒரு சிறு கருவி தயாரித்து பரீட்சித்துப் பார்க்க வேண்டுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அப்படித் தயாரிக்கின்ற அந்தக் கருவிக்கு உத்தேச மதிப்பு விலை என்ன ஆகும்? அது சாத்தியமாக இருக்குமா என்ற விபரங்களை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, அந்த இயந்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டது. ஒரு பகுதி 7,000 ரூபாய்; இன்னொரு பகுதி 5,000 ரூபாய் விலை ஆகும்.

1972 மார்ச் 30]

Varieties of banana

*810 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(*a*) whether any Hybrid Banana Plant has been evolved in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) ஆம்.

(இ) ஆடுதுறை மத்திய வாழை ஆராய்ச்சிப் பண்ணையில் கீழ்க்கண்ட ஒட்டின வாழைகள் உண்டாக்கப்பட்டன:—

	பெண் இன வாழை.	ஆண் இனமாக உபயோகித்த காட்டு வாழைகள்.
1.	பூவன்	மூசா பல்பிசியாளு (வகை—நீர் வாழை).
2.	பூவன்	மூசா காக்சினியா.
3.	மொந்தன்	மூசா காக்சினியா.
4.	ரஸ்தாளி	மூசா பல்பிசியாளு.
5.	ராஜவாழை	மூசா பல்பிசியாளு (வகை—இலைவாழை).
6.	பேயன்	மூசா பல்பிசியாளு (வகை—இலைவாழை).
7.	பேய்குன்னன்	மூசா பல்பிசியாளு (வகை—இலைவாழை).
8.	பேய்குன்னன்	மூசா பல்பிசியாளு.
9.	பேய்குன்னன்	மூசா சிலியோகார்பா.
10.	தோட்டி	மூசா சிலியோகார்பா.
11.	தோட்டி	மூசா பல்பிசியாளு (வகை—காட்டுவாழை).
12.	கோவாகர்	மூசா பல்பிசியாளு.
13.	வெண்ணீட்டின் மன்னன்	மூசா பல்பிசியாளு.
14.	நெய்வன்னன்	மூசா பல்பிசியாளு (வகை—சவாய்).

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன்: தலைவரவர்களே, இப்பொழுது அமைச்சரவர்கள் சொன்ன பெயர்களைப் பார்த்தால் சைஞ பாஷை மாதிரி இருக்கிறது. இந்த வாழைகள் எல்லாம் நம் நாட்டு வாழைகளாகத் தெரியவில்லையே. எல்லாமே வெளிநாட்டு வாழைகளா? இல்லையென்றால் அவைகளுக்கு எல்லாம் புரியும்படியாக பெயர் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இந்த பெண் இன வாழைகள் எல்லாம் தமிழ்நாட்டு வாழைகள்தான். ஆண் இனமாகச் சொல்லப்பட்ட வாழைகள், நமது வாழையின் தரத்தை உயர்த்துவதற்காக வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை.

திரு. என். கணபதி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது பெண் இனம், ஆண் இனம் என்று சொன்னார்கள். அவைகளுக்குத் திருமணம் நடத்திவைத்து, இனவிருத்திச் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் தலைமை வகிப்பதானால் நாம் திருமணம் நடத்தி வைக்க முயற்சி செய்வோம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், அமைச்சரவர்கள் வாழைகளின் பெயர்களைக் குறிப்பிட்டார்கள். ஒட்டு வாழைகளுக்கு என்று அந்தப் பெயர்களைக் கொடுத்திருக்கிறார்களா? அப்படி இருந்தால் சாதாரண விவசாயிகளுக்குப் புரியும்படியாக எளிய தமிழ் பெயர்கள் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, முதலில் சொன்னதுதான் வாழைகளின் பெயர்கள். பூவன், மொந்தன், பேயன், ரஸ்தாளி இவைகள் எல்லாம் தமிழ் பெயர்கள்தான். ஒட்டு இனத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட வாழைகள் இரண்டாவதாகச் சொல்லப் பட்டவை.

திரு. த. சோலையா: தலைவரவர்களே, இங்கே சொல்லப்பட்ட வாழை இனங்களில் தமிழ்நாட்டு ஏழை எளிய மக்கள் பயிர் செய்யும் நாட்டு வாழைகள் இடம் பெறவில்லை. எனவே, அதன் அவசியத்தை உணர்ந்து, உடனடியாக நாட்டு வாழைகளையும் இடம்பெறச் செய்து, அவைகளின் முன்னேற்றத்திற்கு தமிழ்நாடு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, சமீபத்தில் காஞ்சிகேலா என்று சொல்லக்கூடிய மொந்தன் வகை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில் இருந்து அதிகமாக கன்றுகளை உற்பத்தி செய்து, இப்போது விவசாயிகளுக்கு தந்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. கணேசன்: தலைவரவர்களே, இந்த ஆண் பெண் வாழை இனங்களில் எந்தெந்த வாழையின் பழங்களுக்கு மார்க்கெட் அதிகம் என்று அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இது அவரவர் தன்மைக்கு ஏற்றது. சிலருக்கு பேயன் பழம் ருசியாக இருக்கும். சிலருக்கு மொந்தன் ருசியாக இருக்கும். சிலருக்கு ரஸ்தாளி ருசியாக இருக்கும். எனவே, அவரவர் ருசியின் தன்மையைப் பொறுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, நான் 810, 811 இந்த இரண்டு எண்கள் உள்ள கேள்விகளுக்கும் சேர்த்தே அத்துணைக் கேள்வியை கேட்டுவிடுகிறேன். தமிழ்நாட்டில் இப்போது மோரிஸ் என்ற